Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

21 செப்டெம்பர் 2020, கொழும்பு

**3,000 விவசாயிகளுக்கு தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் நெஸ்லே நிறுவனத்திடமிருந்து விரிதிறன் கொண்ட தென்னைப் பயிர்ச்செய்கைக்கான பயிற்சி மற்றும் விவசாய உதவிகள்**

*நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் நான்காவது ஆண்டை பூர்த்தி செய்துள்ளது*

நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 3,000 தெங்குப் பயிர்ச்செய்கை விவசாயிகள் மற்றும் தங்கள் வீட்டு வளவுகளில் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் நெஸ்லே நிறுவனத்திடமிருந்து 150,000 கிலோ உரம் மற்றும் நவீன விவசாய முறைகள் குறித்த பயிற்சியைப் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் நான்காவது ஆண்டு நிறைவக் குறிக்கும் முகமாக அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரதானமாக வரட்சி மற்றும் பயிர் நோய் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக நிலவும் சீரற்ற தேங்காய் விநியோகத்தை நிவர்த்தி செய்ய நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம் மக்களுக்கு அதிக விரிதிறன் கொண்ட தென்னை இனங்களை வளர்க்க உதவுவதுடன், புதிய தொழில்நுட்பங்கள், சிறந்த நடைமுறைகள், தரமான நடுகை மூலப்பொருட்கள் மற்றும் தொழில்ரீதியான வேளாண்மை உதவிகள் போன்றவற்றை அவர்கள் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ளவும் வழிகோலுகிறது.

“இலங்கை மக்களின் வாழ்வில் தேங்காய் என்பது ஒரு மையமாக உள்ளதுடன், இது எங்கள் மிக முக்கியமான பயிர்களில் ஒன்றாகும். நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் நான்காவது ஆண்டின் இறுதியில் இது ஏற்படுத்தியுள்ள வலுவான நேர்மறையான தாக்கத்தையும், 95% வெற்றி வீதத்தைக் காண்பிக்கும் வகையில் இதுவரை விநியோகிக்கப்பட்ட தாவரங்களின் நல்ல வளர்ச்சியையும் குறிப்பிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த திட்டத்தின் வெற்றியானது தெங்கு அபிவிருத்திச் சபைக்கும் நெஸ்லே நிறுவனத்துக்கும் இடையிலான அரச-தனியார் பங்குடமையின் வலிமைக்கு ஒரு சிறந்த சான்றாகும்” என்று தெங்கு அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைத் தலைவரான திரு ஜெயந்த விக்ரமசிங்க அவர்கள் கூறினார்.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டமானது தென்னை வளர்ப்பில் ஈடுபடும் 3,000 குடும்பங்களுக்கு பாதகமான வானிலை மற்றும் பயிர் நோய்களிலிருந்து விரிதிறன் கொண்ட ஒரு சிறப்பு கலப்பு இனத்தைச் சேர்ந்த 19,000 தென்னங்கன்றுகளை வழங்கியுள்ளது. முதல் தொகுதி 2021 ஆம் ஆண்டில் காய்த்து பயன்தரவுள்ளது. விநியோகத்தை அதிகரிக்க, இந்தத் திட்டமானது மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களிலும், பாரம்பரிய தென்னை முக்கோணப் பிரதேசத்திற்கு வெளியே உள்ள பகுதிகளிலும் தென்னை வளர்ப்பில் ஈடுபட உதவுவதுடன், இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சியளிக்கவும், மேம்படுத்தவும் நான்கு மாதிரி பண்ணைகளையும் கொண்டுள்ளது. தென்னங்கன்றுகள் வளர்ந்து காய்த்து பயன் தரும் வரையில், மாற்று வருமானத்தைப் பெற ஏதுவாக குறுகிய கால காய்கறி பணப்பயிர்களை (பயிர்களுக்கு இடையில்) பயிரிடவும் இது தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கிறது. பலர் தங்கள் பயிர்களுக்கு சீரான நீர்ப்பாசன வழங்கல் இல்லாமல் போராடுவதால், அவர்களுக்கு உதவும் முகமாக இரண்டு மாதிரி பண்ணைகள் ஒரு குழாய் கிணறு மற்றும் நுண் நீர்ப்பாசன முறையுடன் அமைக்கப்பட்டுள்ளன.

“உள்நாட்டில் தென்னை வளர்ப்புத் தொழிலுக்கு ஆதரவளிப்பதில் கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக நாம் இதயபூர்வமாக செயற்பட்டு வந்துள்ளோம். இன்று எங்கள் *மெகி* தேங்காய் பால் மாவுக்கு மிக உயர்ந்த தரமான இலங்கை தேங்காயை வாங்குவதன் மூலம் 6,000 இற்கும் மேற்பட்ட தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களிப்பு செய்கிறோம். மேலும் 3,000 விவசாய குடும்பங்களை ஆதரிக்கும் நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டம், இத்தொழில்துறையை ஆதரிக்க உதவும் எங்கள் சமீபத்திய முயற்சியாகும். விரைவாக வளர்ந்து காய்த்து பயன் தருவதுடன், விரிதிறன் கொண்ட சிறப்பு கலப்பின இனங்களை வழங்குவதன் மூலம், அதிகளவான மக்கள் தென்னை வளர்ப்பில் ஈடுபட்டு, அதன் மூலமாக விநியோகத்தை அதிகரிக்க நாம் உதவுகிறோம். *சிறந்த உணவு, சிறந்த வாழ்வு* என்பதை ஊக்குவிக்கும் எமது நோக்கத்தின் ஒரு அங்கமாக, நெஸ்லே தயாரிப்புகள் மக்களுக்கு சிறந்தவை மட்டுமல்ல, அவர்களின் சமூகத்திற்கும் சிறந்தவை என்பதை நுகர்வோர் அறிந்து கொள்ள வேண்டும் என நாம் விரும்புகிறோம்” என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலின் அவர்கள் குறிப்பிட்டார்.

---